**STC.NO.2691/2023** **நாள்.03.07.2026.**

**புகார்தாரர் – விஜயக்குமார் த/பெ. எத்திராஜ்**

கரூர் மாவட்டம், பசுபதிபாளையம் அஞ்சல், காந்திகிராமம் வடக்கு , இ.பி காலனி, அண்ணாநகர், கதவு எண். 812/04 ல் வசிக்கும் எத்திராஜ் அவர்கள் குமாரர் விஜயக்குமார் ஆகிய நான் சத்திய பிரமாணத்தின் பேரில் கூறுவதாவது,

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். என்னுடைய ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்கிறேன். நான் எதிரியின் மீது மாற்றுமுறையாணை சட்டம் பிரிவு 138 ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதில் எதிரிக்கு எதிராக பிடியாணை கட்டளை பிறப்பிவிக்கப்பட்டு நிலுவையில் இருந்துவருகிறது. இந்நிலையில் எதிரி இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைக்கப்பெற்றது நான் விசாரித்த வகையிலும் எதிரி இறந்துவிட்டது உண்மை என தெரியவருகிறது. ஆனால் எதிரியின் இறப்பு சான்றிதழ் எனக்கு கிடைக்கவில்லை. எனவே இவ்வழக்கினை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை இருப்பதால் இவ்வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். எனவே இவ்வழக்கை திரும்ப பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**